சூரியப்புதல்வர்கள் 2004



தமிழீழத்தின் அடிக்கல் **11**

# ஒரு மலையின் சரிவு



மேஜர் கணேஸ்

அவனுடைய சாவு ஓர் இலையின் உதிர்வு அல்ல - ஒரு மலையின் சரிவு ஆகும்.

மேஜர் கணேஸ் தமிழீழ விடுதலைப் போர் வரலாற்றில் மேனி சிலிர்க்க வைக்கும் ஒரு அத்தியாயம் ஆகிவிட்டான்.

பெருத்த மீசை - தடித்த உதடுகள் - பருத்த மார்பு - களத்தில் வெடித்த எரிமலையாய் உலா வந்தவன் கணேஸ்.

மூதூர் - ஆறுகளால் துண்டு துண்டாகி புவியியல் நிலையில் ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் நிலப் பரப்பு - கொலை வெறிச் சிங்களவரின் குடியேற்றப்பகுதி - இஸ்லாமியத் தமிழருக்குப் பாதுகாப்பு என்ற பெயரில் அவர்கள் வாழ்வையே சூறையாடும் முஸ்லீம் ஊர்காவல் வெறிப்படையின் இருண்ட கூடாரம், 9 இராணுவ முகாம்களாலும் 3 அதிரடிக் காவல் நிலையங்களாலும் வளைக்கப்பட்ட தமிழீழத்தின் முள்வேலிப் பகுதி. அங்கேதான், விடுதலைப்புலிகள் இயக்கத்தை வித்திட்டு வளர்த்தான் கணேஸ்.

1981 ஆண்டு தலைவர் பிரபாகரனைச் சந்தித்து விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தபோது அவனுக்கு வயது இருபதுதான். ஆனால் அப்போதே அவன் கண்களில் நெருப்பின் அலை பொங்கிற்று. ஒன்றாய்ப் படித்த காலத்தில் ஆசீர் சீலனோடு சேர்ந்து வளர்த்துக்கொண்ட விடுதலை உணர்வுகள் ஆழப்பதிந்திருந்தன.

தளபதி சீலனுக்குப் பக்கத்தில் அவன் ஒரு வீரனாய்க் களத்தில் நின்ற காலம் உண்டு. அந்த நாட்கள் கணேஸின் வாழ்க்கையில் அவன் பாடம் கற்ற நாட்களாகும்.

மீசாலை முற்றுகையில் தளபதி சீலன் களத்தில் மீளாத்துயில் கொண்ட நிகழ்ச்சி கணேஸ் நெஞ்சில் மின்னலின் கொடிய வீச்சாயிற்று. தன் இனிய பள்ளிக்கூட நண்பனின் அந்தப் பெரிய சாவை அவன் என்றும் மறந்ததில்லை.

நெல்லியடியில்தான் அவனுடைய முதல் களப் போர். இங்கேதான் 02.07.1982 அன்று ரோந்துப் பொலிஸ் படையினரைச் சாகடித்து, வீறு கொண்ட தன் போராட்ட வரலாற்றின் முதல் அத்தியாயத்தை எழுதினான். ஒப்பில்லாத அந்த மாவீரன் தொடர்ந்து கண்ட களங்கள் ஒன்றா? இரண்டா?

சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல், உமையாள்புரம் இராணுவ வாகனங்கள் மீதான அதிரடி, 13 இராணுவ வெறியர்களை முதன்முறை பலிகொண்ட திருநெல்வேலி வரலாற்றுப்போர், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத் தாக்குதல், திருக்கோவில் நீதிமன்றத்தில் துரோகி ஒருவன் மீதான துப்பாக்கிப் பிரயோகம், ஈச்சிலம்பற்றை முற்றுகைத் தகர்ப்பு, கட்டைப் பறிச்சான் கண்ணிவெடித்தாக்குதல், பாலம்பட்டாறு இராணுவ மோதல், புலிகள் வரலாற்றில் முதன் முதல் இராணுவத்தின் எல்.எம்.ஜி. வகைத்துப்பாக்கியைக் கைப்பற்றிய பட்டித்திடல் கவசவண்டி தகர்ப்பு, இறால்குழி சுற்றிவளைப்பு மீறல் போர், 3ம் கொலனி இராணுவ நேரடி மோதல், வாகரை கண்ணி வெடி அதிரடித் தாக்குதல், தெஹிவத்த பொலிஸ் கொமாண்டோக்கள் கடத்திச்சென்று நடுக்காட்டில் கற்பழிக்க முயன்ற தமிழ்ப் பெண்களை மீட்டெடுத்த தீரப்போர், எமது விடுதலை வரலாற்றில் முதல் தடவை சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஹெலிகொப்டர் போர் விமானத்தைச் சுட்டு வீழ்த்திய கூனித்தீவு முற்றுகை உடைப்பு, சம்பூர் யுத்தம் வெருகல் விடுதலைப்புலிகள் முகாம் வளைப்பு முயற்சி முறியடிப்பு. ஆம்.... கணேஸ் புகழின் எல்லை கடந்த மாவீரன்.

தமிழீழத்தின் வடக்கெல்லைக் கிராமங்களில் ஒன்றான காரைநகர் தொடக்கம், தெற்கெல்லைக் கிராமங்களில் ஒன்றான திருக்கோவில் வரை

களங்கள் பார்த்த கணேஸ், தமிழீழம் முழுவதையும் தன் இரண்டு கால்களால் அளந்தான். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோண மலை, மட்டக்களப்பு என்று நீண்டுகிடந்த தமிழீழத்தை இணைத்து நின்ற அவன் செயல் வடக்குக்கும் கிழக்குக்கும் வேலிபோட நினைப்போருக்கு வரலாறு கொடுத்த சரியான அடியாகும்.

கந்தளாய் என்னும் கிராமத்தில் எளிமையான குடும்பத்தில் பிறந்த கணேஸ் ஆடம்பரம் இல்லாதவனாய் எளிமையானவனாகவே கடைசிவரை வாழ்ந்தான். புலிகள் அவனை விரும்பினார்கள் என்று சொல்வதைவிட அவனைப்போல் இருக்க விரும்பினார்கள் என்பதே பொருத்தமானது.

சூனித்தீவின் அழகான உப்பாற்றங்கரையில், புலிகள் அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து மகிழ மகிழப் பேசுவார்களே! வெருகல் மண்ணுக்குப் பச்சை வண்ணம் பூசும் வயல்களில் புலிகளின் கைகளைப் பற்றியபடியே சிரிக்கச் சிரிக்கப் பேசி அவன் உலா வருவானே ஓ!.... அந்த நாட்கள் மிக மிக இனிமையானவை. இஸ்லாமியர், இஸ்லாமியர் அல்லாதார் இடையே மதக்கலவரத்தை ஏற்படுத்தித் தமிழினத்தைப் பிரிக்கச் சிங்கள ஆட்சியாளர் முனைந்த ஒரு சந்தர்ப்பத்தில் கலவரத்தை நிறுத்த மூதூர் நகருக்கு பிரசைகள் குழுவை அனுப்பினான் கணேஸ். அக்குழுவைக் கூலிப் படையினர் கைதுசெய்தபோது, போராடி அவர்களை அவன் மீட்ட களப் போர், இன்னொரு மெய்சிலிர்க்கும் வரலாற்று நிகழ்வே. புலிகளுக்குப் பக்கத்தில் மட்டுமல்ல மக்களுக்குப் பக்கத்திலும் அவன் நெருக்கமாகவே நின்றான்.

சாவு அந்த மாவீரனைச் சந்தித்தநாள் கொடுமையானது! திருகோண மலை மாவட்டத்திலுள்ள பெரிய பாலம் என்ற இடத்தில் 05.11.1986 அன்று 4 மணி அளவில் நிகழ்ந்த இராணுவத்தின் சுற்றிவளைப்பில், மேஜர் கணேஸ், நெருப்பின் நடுவில் ஐந்து ஆண்டுகள் நின்று விளையாடிய விடுதலைப் புலி நேர் நின்று எதிரிகளை மோதி நிமிர்ந்த தலையோடு மரணத்தை ஏற்றுக்கொண்டான். தமிழீழத் தலைவர் பிரபாகரனின் மாபெரும் துப்பாக்கிகளில் ஒன்று மௌனத்தைத் தழுவிற்று.

ஓ....... கணேஸ்!......

நீ போய்விட்டாயா? இல்லை....!

அகதிகள் முகாமில் இருந்து உன்தாய் ஆசையோடு உனக்கென்று சமைத்துக் கொடுத்த சோற்றுப் பொட்டலத்தோடு, உன் தந்தை பயந்து பயந்து உன்னைக் காண வருவாரே...

அந்தச் சோற்றுப் பொதியை அவிழ்த்து வைத்து ஒவ்வொரு பிடியாய் வைத்து நீ புலிகள் வாயில் ஆசையோடு ஊட்டுவாயே!

நீ ஊட்டிய சோறு எங்கள் உடலில் இரத்தமாகி விட்டதையா.

நடக்கிறோம்.......

அதே உப்பாற்றங்கரை..... அதே வயல்வெளிகள்......

நன்றி: விடுதலைப்புலிகள், குரல்:12, 1987.





# மாவீரர் வழிசெல்வோம்

மாவீரர் நாமத்தைப் போற்றிடுவோம்
மானமுடன் அவர் வழி சென்றிடுவோம்
மாண்ட மாவீரரின் கனவு பலித்திட
போற்றி வாழ்த்திடுவோம்

தாய்நாட்டு மானங் காக்க
புறப்பட்ட வேங்கைகளே
அழித்திட்ட பகைவனின்
கோட்டையை அழித்திடப் புறப்பட்டோம்

சொந்தப் பற்று பாசத்தை மறந்து
தாய்நாட்டு பற்றுடன் மானங்காத்த மாவீரர்கள்
இவர்கள் பாதம் தொட்டு வணங்கி
உறுதி கொண்டு போர்களம் விரைவோம்

போராளி அன்புக்கரசன் (ஜீக்கி)
நவம் அறிவுக்கூடம்